Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

ம். சுப்பிரமணிய

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 13-4-1946 சித்திரைமீ 1உ { மலர் 27

## மாணவத் தோழர்கட்கு

15-4-46ல் ஈரோடு வெங்கட்ட நாயக்கர் சத்திரத்தில் மாணவர் பயிற்சிக் கூடம் ஆரம்பமாகிறது.

கல்லூரி மாணவர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் பயின்ற மாணவர்களுக்கும் அவர்கள் வரக்கூடிய நாள், பிரச்சாரத்தில் கலந்துகொள்ளும் காலம் இவைகளை யொட்டி 70பேருக்கு மேல் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அழைப்புபெற்ற மாணவர்கள் தவறாது வர வேண்டுகிறோம். இவர்களுக்குப் பயிற்சி முடிவு பெற்றவுடன் பிற மாணவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படலாம்.

இப்பொழுது வருபவர்களுக்குப் பயிற்சி பத்துநாள்வரை நடைபெறலாம். பயிற்சி முடிந்ததும் மாவட்டங்களுக்குப் பிரித்து அனுப்பப்படுவார்கள்.

பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் சி. என். அ., டி. பி. வேதாசலம், இரா. நெடுஞ்செழியன் முதலியவர்கள் பயிற்சி தருவார்கள்.

அழைப்புபெற்று 15ம் தேதியே வர முடியாத தோழர்கள் 5-நாட்களுக்குள் வந்து சேரலாம்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

---

## கறுப்புச்சட்டைப்படை மாகாண மாநாடு மதுரை

மதுரை - வைகையா [illegible] ராய நகர் அமைத்த "நாகம்மை [illegible] ய ரில் 250" X 200" அடி அகல [illegible] மிகப் பெரிய பந்தல் போடப்படுகிறது. கடைகள் வைக்க விரும்புவோர் ஏப்ரல் 30க்குள் மாநாட்டு காரியாலயத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

மாநாட்டு வரவுக்கு டிக்கட்டு புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் விரைவில் விற்பனைசெய்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

வரவேற்புக் குழுவினர்.

## சேர்ந்தீர்களா?

திராவிடர் கழகத்தில் 1946ம் ஆண்டிற்கு அங்கத்தினராய்ச் சேர்ந்துவிட்டீர்களா? இல்லையேல் இன்றே இப்பொழுதே சேருங்கள்.

4 கோடி திராவிட மக்களும் திராவிடர் கழகத்தில்தான் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

உங்கள் பகுதியிலும், ஊரிலும், வட்டத்திலும் உள்ள எல்லோரையும் சேர்த்து கிராம கழகங்களையும், தாலுக்கா கழகங்களையும் கழகம் இல்லாத ஊர்களில் உடனே ஏற்படுத்துங்கள்.

உழைப்பாளிகளைப் பார்த்து தலைவர், செயலாளர், அமைப்பாளர் போன்ற உத்தியோகப் பொறுப்பை அளியுங்கள். திராவிடர் கழகம் ஏழைகளுக்குப் பாடுபடுவது; ஏழைகளுக்குச் சொந்தமானது; ஏழைகளின் பாதுகாப்பு ஸ்தாபனம். ஏழைமக்களே அதனை நிர்வகிக்கவேண்டும். இளைஞர்கள் நன்கு உழைக்கக் கூடும். உழைக்கவேண்டும். தன்னலம் மறந்த உழைப்பு தேவை, மிகமிகத் தேவை. இதற்கு வாலிபர்கள் மிகத் தகுதியானவர்கள், வாலிபர்களே இன்றே பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்.

வருங்காலம் பெருஞ் சோதனைக் காலம். உங்களால்தான் வெற்றிபெற முடியும் உடனே அங்கத்தினர்களை ஒரு லட்சமாக்குங்கள், கழகம் அமையுங்கள். கடமையைச் செய்யுங்கள்.

o o

## திராவிடர் கழகங்களுக்கு.

சென்ற ஆண்டில் சுமார் 300 திராவிடர் கழகங்கள் தமிழ் ஜில்லாக்களில் அமைக்கப்பட்டவை. இவ்வாண்டிற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த செய்தி சில கழகங்களிலிருந்தே வந்துள்ளது. பிற கழகங்கள் என்னசெய்கின்றன? நிர்வாகஸ்தர்கள் உண்டா, இல்லையா? என்ன செய்கிறார்கள்? என்பதே தெரியவில்லை. வாராந்தோறும் அறிக்கைவிட்டு குடி அரசில் உள்ள கொஞ்சம் இடத்தையும் வீணாக்குவதாகவே உள்ளது. இது சரியல்ல. உடனே கழக உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுங்கள். இவ்வாண்டிற்கு (1946) நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து செய்தியனுப்புங்கள். இம்மாதத்திற்குள் கழகங்களின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொன்றின் நிர்வாகஸ்தர்கள் பெயர்களும் தெரிந்தாகவேண்டும். அன்பு கூர்ந்து உடனே செய்துமுடியுங்கள்:

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

---

## 'திராவிடஸ்தான் வேண்டும்'

### தூதுகோஷ்டிக்கு டாக்டர் கிருஷ்ணசாமியின் யோசனை

"இந்தியாவிலிருக்கும் பல ஜாதிகளிடையே ததும்பிக்கொண்டிருக்கும் சுதந்திர வேகத்தை பிரிட்டிஷ் மந்திரிகள் தூது கோஷ்டி உணரவேண்டும். அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படாவிட்டால், தென்னிந்தியர்களுக்கு, திராவிடஸ்தானம் அளிக்கப்படாவிட்டால் சாசுவதமான அமைதியோ அரசியல் சமாசமோ இந்த நாட்டில் ஏற்படாது. அகில இந்திய ஒற்றுமையை உத்தேசித்தும் அநேக சமுதாயங்களின் சுதந்திரத்தை உத்தேசித்தும் திராவிட சமுதாயத்தின் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் தூதுகோஷ்டி வரவழைத்து பேசவேண்டும். தென்னாட்டில் குமுறிக்கொண்டிருக்கும் திராவிட மனோவேகத்தையும், புரட்சி மனப்பான்மையையும் எடுத்துக்கூற சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்" என்று டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி 3-4-46ல் திராவிட வாலிப லீகின் ஆதரவில் செயிண்டு மேரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

---

10-3-46ல் நேரூரில் க. அன்பழகன் அவர்களால் திராவிடர் கழகத் திறப்பு விழாவும், தோழர் சீனிவாசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்று தோழர்கள் க. அன்பழகன், எ.பி. சனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# கழகம் அமைத்தார்கள்

1-2-46ல் குடந்தை வலையபேட்டையில் திராவிட கழகம் தோழர் எஸ். கே. சாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 3-4-46ல் மேற்படி கழகத்திற்கு என். துரைசாமி அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

4-4-46ல் வடஆற்காடு தண்டராம்பட்டில் கிராம வாலிபர் கழகம் என்றிருந்ததை திராவிட வாலிபர் கழகம் என மாற்றியமைக்கப்பட்டதென செயலாளர் பா. சி. இராமச்சந்திரன் தெரிவிக்கிறார்.

1-4-46ல் சென்னை திருவல்லிக்கேணி 3, நீலி வீராசாமி செட்டித்தெரு 2வது சந்தில் கோ. முத்தமிழ் பாண்டியன் தலைவராகவும், ந. ப. தாமோதரம் செயலாளராகவும் கொண்ட திராவிட மாணவர் கழகம் நிறுவப்பட்டது.

31-3-46ல் திருத்துறைப்பூண்டியில் வீ. வடிவேல் அவர்களைத் தலைவராகக் கொண்ட பகுத்தறிவு கழகம் நிறுவப்பட்டது.

29-3-46ல் திருத்துறைப்பூண்டி தாலுக்கா தகட்டூர் திராவிடர் கழகத்திற்கு ச. வேலாயுதம் அவர்களை தலைவராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

31-3-46ல் கீழ் ஈசால் திராவிடர் கழகத்திற்கு தோழர் சா. பொன்னப்பன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

31-3-46ல் மணச்சநல்லூர் திராவிடர் கழகத்திற்கு தோழர் ஆ. கி. ம. இராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற் குழு அமைக்கப்பட்டது. விரைவில் ஆண்டுவிழா நடத்த முடிவு செய்யப்பட்டது.

1-4-46ல் க. ஆடுதுறையில் தோழர் து. அண்ணாமலை அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழகம் திறந்து வைக்கப்பட்டது. மாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இட்டக்குடி கோவிந்தன், இராமலிங்கம், கந்தசாமி, டி. எ. கரீம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வடஆற்காடு தண்டராம்பட்டு திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் ஆர். நாமதேவ் தலைவராகவும், எஸ். இராமச்சந்திரன் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

வடஆற்காடு நெல்லூர்குட்டிபாளையம் திராவிடர் கழகத்திற்கு தோழர் கருப்பையா தலைவராகவும் தோழர் பெருமாள் செயலாளராகவும்கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது.

வடஆற்காடு கீழபாளையம் திராவிடர் கழகத்திற்கு தோழர் நடேசன் அவர்களைச் செயலாளராகக்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

வடஆற்காடு நெல்லிக்குப்பம் கிராம திராவிடர் கழகத்திற்கு தோழர் சகாதேவன் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வடஆற்காடு எடுத்தனூர் கிராமத்தில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு மிராசுதார் தோழர் சகாதேவன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

6-4-46ல் வடஆற்காடு திரியாளயம் கிராமத்தில் தோழர் வி. கோவிந்தசாமி தலைவராகவும், டி. வி. வேணுகோபால் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு அன்று மாலை வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சிங்காரவேலு அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

3-4-46ல் சேலம் டவுன் அம்மாபேட்டையில் தோழர் கே. பி. சந்திரயன் அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிட இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் கே. கே. சாம்பலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழகத் திறப்புவிழாவில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

8-4-46ல் கொரடாச்சேரியில் தோழர் சாமிநாதன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு தோழர் வைரக்கண்ணு தலைவராகவும், தோழர் ஞானசுந்தரம் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

7-4-46ல் பொதத்தனூர் தோழர் தியாகராசன் அவர்கள் இல்லத்தில் தோழர் கா. பொ. சிங்காரம் அவர்கள் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் 1946ம் ஆண்டிற்கு தோழர் க. சிவப்பிரகாசம் தலைவராகவும், நா. வை சண்முகம் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

7-4-46ல் நடைபெற்ற துறையூர் திராவிடர் கழகக் கூட்டத்தில் 1946ம் ஆண்டிற்கு தோழர் என். கே. கிருட்டினசாமி தலைவராகவும், து. மா. பெரியசாமி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## உளுந்தூர்பேட்டையில் திராவிடர் கூட்டம்

7-4-46 ஞாயிறன்று உளுந்தூர்பேட்டையில் தோழர் எ. சி. பொன்னரசன் அவர்கள் தலைமையில் திராவிடர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் புலவர் ஈ. மு. மாணிக்கம், வீரமணி ஆகியோர் 'திராவிடர் நிலை' என்பது குறித்து அரிய சொற்பொழிவாற்றினர். தேசியத் தோழர்களின் கேள்விகளுக்கு தக்க பதில் அளிக்கப்பட்டது. தோழர் ஆ. அன்பழகன் நன்றி கூறினார்.


## திராவிட நண்பர்களுக்கு ஓர் நற்செய்தி

நமது நாடு திராவிடம், நமது மொழி திராவிட மொழி, நாம் எல்லோரும் திராவிடர்கள் என்று புரட்சிகரமான பொன்மொழிகளை தந்து இனவெழுச்சியை உண்டாக்கிய நமது அன்புக்குரிய திராவிடர் தலைவர் பெரியார், திராவிடர் தளபதியும், புலவர் திலகமும் நமது பெருமைக்கு உறவிடமான நமது சி. என். எ., புரட்சிக்கவிஞரும், கவியாசருமான பாரதிதாசன், ஆரிய அக்ராகாரத்துக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் சாவுமணி அடிக்கப்பட்டு போர் முழக்கம் செய்துவரும் நமது இளந்தாடி நெடுஞ்செழியன், திராவிட வாலிபர்கள் உள்ளத்தைக் கவர்ந்த தோழர் அன்பழகன் முதலானவர்களுடைய உருவமைமந்த லைன் பிளாக்குகள் உங்களூர் திராவிடர் கழகத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே எங்களுக்கு எழுதுங்கள்.

ஒன்றின் விலை ரூ 2-0-0. போஸ்டேஜ் செலவு எமதே

குறைந்த பிளாக்குகளே வெளிவந்துள்ளது.

வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்.

திராவிடன் பதிப்பகம்,
133, லாங்குபசார் வேலூர் (வ. ஆ.)

## நடக்க இருப்பவை

● 14-4-46 ஞாயிறு இரவு 9½ மணிக்கு நீடாமங்கலம் கருப்புச்சட்டைப்படை தோழர்களால் "புரட்சி கவிஞன்" நாடகம் தோழர் எஸ். கே. சாமி அவர்கள் தலைமையில் நீடாமங்கலம் ராஜாராஜேஸ்வரி எலக்ட்ரித்தியேட்டரில் ஒலிபெருக்கியுடன் நடைபெறும். கட்டணம் இல்லை திரண்டு வருக!

● 14-4-46ல் ஆற்காடு முஸ்லிம்லீக் சார்பில் ஆற்காடு ஜின்னா மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அன்பழகன் பி. ஏ. (ஆனர்சு) என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 21-4-46 ஞாயிறு மாலை 4 மணிக்கு ஒட்டேரி கூக்ஸ்ரோடு 41வது எண் இல்லத்தில் மேற்குசென்னை திராவிடர் மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக்கூட்டம் தோழர் என். எஸ். தங்கரூபன் தலைமையில் நடைபெறும். மாநாட்டிற்கு நன்கொடை வசூலித்த தோழர்கள் தொகையை செயலாளர்களிடம் செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.

● 21-4-46ல் மதுரையில் கருப்புச் சட்டைப்படை அலுவலகத்தில் க. ச. படை மாகாண மாநாட்டு வரவேற்புக் குழு கூட்டம் நடைபெறும். இதனையே அழைப்பாகக்கொண்டு வரவேற்புக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு செயலாளர் மு. இராசகோபால் கேட்டுக்கொள்ளுகிறார்.

### சென்னை சர்க்கிள் மாநாடுகள்

சென்னை திராவிடர் பெடரேஷனின் சர்க்கிள் மாநாடுகள் கீழ் குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறும்.

வடசென்னை (1வது சர்க்கிள் மாநாடு) 28-4-46 ஞாயிறு தண்டையார்பேட்டை, சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பந்தல்.

தியாகராயநகர்-நுங்கம்பாக்கம் வட்ட மாநாடு 5-5-46 ஞாயிறு தேனாம்பேட்டை சன் தியேட்டரில்.

மேற்கு சென்னை (4வது சர்க்கிள் மாநாடு) 26-6-46 பெரம்பூர் டாக்கீசில். முழு விவரங்கள் அவ்வப்போது வெளி வரும்.

சென்னை ஜில்லா திராவிடர் பெடரேஷன் முக்கிய நிர்வாகக் கமிட்டி 21-4-46 ஞாயிறு காலை 9-மணிக்கு பார்க்டவுன் பொம்முசெட்டித் தெரு 11-வது மாடியில் கூடும்.

பல முக்கிய விடயங்கள் ஆலோசனைக்கு வருவதால் நிர்வாக உறுப்பினர்களும், ஒவ்வொரு டிவிஷனின் தலைவர்—காரியதரிசிகளும் தவறாது வர வேண்டுகிறேன்.

என். வி. என். பொதுக்காரியதரிசி.

# செல்லம்—ராஜா வாழ்க்கை ஒப்பந்தம்

★

பெரியாரின் முன்னவர், வைத்திய வள்ளல்
ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களது இரண்டாவது மகள்
செல்லம் என்கிற
**நாகலக்ஷிமி**
சேலம் தாதம்பட்டி, மணியம் எம். மல்ல நாயக்கர் மகன்
**M. ராஜா**
ஆகிய இருவருக்கும்,
19-4-46 வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு
தளபதி C. N. அண்ணாதுரை அவர்கள் தலைமையில்
ஈரோடு சரஸ்வதி ஹாலில் வாழ்க்லக ஒப்பந்தம் நடைபெறும்.

### வடசென்னை (1வது சர்க்கிள்) திராவிடர் கழக மாநாடு

28-4-46 ஞாயிறு காலை 8 மணிக்கு வடசென்னை (1-வது சர்க்கிள்) திராவிடர் கழக மாநாடு, கல்மண்டபம் போலீஸ் ஸ்டேன் அருகிலுள்ள சர். பி. தியாகராயர் கொட்டகையில் நடைபெறும். தலைவர் தோழர் என். ஜீவரத்தினம், திறப்பாளர்: மதுரை தோழர் கே. எச். ஷேக் அப்துல் காதர். ஊர்வலம் மாலை 4-மணிக்கு இராபின்சன் பார்க்கிலிருந்து புறப்பட்டு தண்டையார் பேட்டையில் முடிவுறும். பொதுக்கூட்டம் மாலை 6-மணிக்கு தண்டையார் பேட்டை மைதானத்தில் தோழர் வி. டி. பெரியசாமி தலைமையில் நடைபெறும். தலைவர் பெரியார், தோழர் எ. பி. ஜனார்த்தனம் மற்றும் பலர் பேசுவர். எம். கே. டி. சுப்ரமணியம் வரவேற்புக் கழகத் தலைவர். எம். வேலுசாமி, எம். பி. பொன்னுசாமி செயலானர்கள்.

### திராவிட நாடு பகுத்தறிவு நிலையம் பம்பாய்

31-3-46ல் மேற்படி கழகக் கூட்டம் தோழர் எஸ். பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்று, தன் நாடு செல்லும் தோழர் என். சங்கரலிங்கம் அவர்களுக்கு மாலைசூட்டி மகிழ்வித்தனர். தோழர் பி. கே. அழகர்சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தனர்.

திராவிட மக்களுடையவும், சிறுபான்மை மக்களுடையவும், நலன்களைக் கவனிக்கும்படி பிரிட்டிஷ் தூதுகோஷ்டிக்கும், கோலார் தங்கவயல் சுரங்கத் தொழிலாளர் நலன்களைக் கவனிக்கும்படி மைசூர் மன்னருக்கும் வேண்டுகோள் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

### மாணவர் சுற்றுப்பயணம்

வடஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

28-4-46 திருப்பத்தூர்
29— ஜோலார்பேட்டை
30— நாட்டாம்பள்ளி.
1-5-46 வாணியம்பாடி
2— ஓய்வு (வேலூர்)
3— வேலூர்
4— செய்யாறு
5— ஆரணி
6— போளூர்
7— வந்தவாசி
8— வில்வாரணி
9— திருவண்ணாமலை
10— தண்டாரம்பட்டு

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும், விவரங்களுக்கு வடஆற்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் வி. எம். இராசமாணிக்கம், வியாபாரம், திருப்பத்தூர் வடஆற்காடு; என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

### அறிவிப்பு

ஆத்தூர், பஸ் ஸ்டாண்டு தோழர் எம். சுந்தரம்பிள்ளை அவர்கள் பங்க் ஷாப்பில் குடி அரசு பத்திரிகை விற்பனைக்கு கிடைக்கும்.

### மணமகள் தேவை

"தமிழாசிரியர் வேலை பார்த்துவரும் 24-வயதுள்ள ஒரு வாலிபனுக்கு ஒரு அழகிய கன்னி அல்லது விதவை மணமகள் தேவை. ஜாதி, மத வேறுபாடு இல்லை. விருப்பமுள்ளவர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

V. P. S. C/o
"குடி அரசு" ஈரோடு.

குடி அரசு

1946-ளு ஏப்ரல் மீ 13௳

# "புலி" வந்தேவிட்டது.

இந்திய தேசிய காங்கரஸ் இந்தியாவின் பூரண சுயராஜ்ஜியத்திற்கு வெள்ளையரை இந்நாட்டைவிட்டு விரட்டுவதற்கு உழைப்பதாக சொல்லிக்கொண்டு இருக்கிறது. வெள்ளையர் (பிரிட்டிஷார்) இந்தியாவை இந்தியர்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போவதாக சொல்லுவது மாத்திரமல்லாமல் ஒப்படைத்துவிட்டுப்போவதற்கு ஆகவே என்று சொல்லிக்கொண்டு பிரிட்டிஷ் மந்திரிகள் மூவர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்து 20 நாட்களுக்குமேல் ஆகிவிட்டன. இந்தியாவின் ஏக பிரதிநிதித்துவம் கொண்டாடும் காங்கரசாரிடமும் காங்கரஸ் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ளாத ஸ்தாபனங்கள் பலவற்றில் முக்கியமானதான முஸ்லிம் லீக்குக்காரர்களிடமும் அவர்கள் கலந்து பேசியவண்ணமாக இருந்து வருகிறார்கள். இதன் பயனாய் இந்திய சுயராஜ்ஜியத்தின் நிலைமை வெள்ளையர் இந்நாட்டைவிட்டு வெளியேறும் தன்மை முன்னிலும் அதிகச் சிக்கலான—மோசமான நிலைமைக்குப் போய்க்கொண்டு இருப்பதோடு காங்கரஸ்காரர்கள் பிரிட்டிஷாரை "தயவுசெய்து நீங்கள் போய்விடாதீர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்கவேண்டிய நிலை ஏற்படுகிறது என்றே சொல்லலாம். ஏனெனில் இந்தியாவை 3 (மூன்று) கூறாகப் பங்குபோட்டால்ஒழிய காங்கரஸ்காரர்கள் சாந்தியோடு இந்தியாவில் வாழ முடியாதென்பதோடு அதற்கப்புறமும் காங்கரஸ்காரர்கள் கவலைஇன்றி சாந்தியாய் வாழமுடியாத கட்டத்தை அடைந்துவிட்டார்கள்.

திராவிட இந்தியா, முஸ்லிம் இந்தியா, ஆரிய இந்தியா என்று பிரித்துத்தான் தீரவேண்டும். இந்தப்படி பிரிக்காதவரை இந்தியாவின் உண்மை சுதந்திரவிஷயம் ஒரு முடிவுக்கு வரப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. அதாவது முஸ்லிம் இந்தியா பிரிக்கப்படாதவரை இந்து முஸ்லிம் தகராருக்கு பைசல் என்பது கிடையாது என்று முஸ்லிம்கள் தீர்மானித்துவிட்டார்கள். அது தாமதம் ஆகஆக முஸ்லிம் இந்தியாவின் எல்லையும் பாதுகாப்பும் அதன் நிபந்தனையும் விரிந்துகொண்டே வளர்ந்துகொண்டே போகின்றது.

வடமேற்கு மாகாணம், பஞ்சாப், சிந்து, வங்காளம், அஸ்ஸாம் பலுஜிஸ்தான் ஆகிய மாகாணங்கள் இப்போது முஸ்லிம் இந்தியாவாக (பாக்கிஸ்தான்)பிரித்து விட்டுவிட வேண்டுமென்ற கண்டிப்பில் எல்லை குறிக்கப்பட்டுவிட்டன. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் இருந்து அஸ்ஸாம் மாகாணத்திற்குப்போக ஒருவழி சர்வை செய்து ஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்பதாகவும் சொல்லப்பட்டாய்விட்டது. இந்தப்படி முஸ்லிம்கள் கேட்பது சரி அல்ல என்று சொல்ல இன்று எவருக்கும் காரணம் காட்டவோ பாத்தியம் கொண்டாடவோ இடமில்லாமல் போனதோடு எதிர்ப்பவர்களின் முட்டாள் தனத்தாலும், யோக்கியமற்ற தனமாய், நாணயமற்ற தன்மையில் நடந்துகொண்ட சூழ்ச்சியாலும் இன்று காங்கரஸ் வீரர்கள் பிரிட்டிஷ்காரனைப் பார்த்து "தயவுசெய்து நீ இந்த நாட்டைவிட்டுவிட்டுப் போய்விடவேண்டாம், எங்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விடவேண்டாம்" என்று கெஞ்சும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது. முஸ்லிம்கள் இந்துக்களிடம் சந்தேகம் கொண்டு தங்கள் நலனுக்கு என்று எதைக்கேட்டாலும் அதற்கு சமாதானம்கூட சொல்லாமல் அவர்களை இழித்து கூறி, வைது, அவமதித்து, மிரட்டி வந்ததின் பயன் எல்லாம் இன்று ஒன்று இரண்டு இந்துக்களை இப்படிப்பட்ட திக்கற்ற தன்மைக்கு அதாவது வெள்ளையனை வெளிப்படையாய் கெஞ்சவேண்டிய நிலைமைக்கு கொண்டுவந்துவிட்டது.

இவ்வளவு மாத்திரம் அல்லாமல் இந்துக்களின் (ஆரியர்களின்) கர்மவினை அவர்கள் இதுவரை புலி வருகிறது, புலி வருகிறது என்று பொய்க்கூச்சல் போட்டு மக்களை ஏமாற்றிவந்த சித்தலாட்டம் நிஜமாகவே "புலி வந்துவிட்டது" என்று கருதும்படி செய்துவிட்டது. என்னவென்னின் இந்த நாட்டில் ஆரியர்கள் முஸ்லிம்களுக்கு விரோதமாய் பிரசாரம் செய்வதற்கு பெரிதும் பயன்படுத்திக்கொண்ட குறிச்சொல் என்னவென்றால் "இந்தியாவை முஸ்லிம் ராஜ்ஜியமாக்க முஸ்லிம் லீக்கர்கள் முயற்சிக்கிறார்கள். இந்துக்களே நீங்கள் இஸ்லாம் ஆட்சியில் இருக்க விரும்புகிறீர்களா? முஸ்லிம்களை வெறுங்கள், துவேஷியுங்கள்" என்று இடைவிடாமல் நேரு பண்டிதர், சாப்ரு, ஜயக்கர், மூஞ்சே, சவர்க்கார், சாஸ்திரி, சி. பி. முதலியவர்கள் கட்டுப்பாடாக பிரசாரம் செய்தார்கள். முஸ்லிம்கள்மீது வெறுப்பை உண்டாக்க வடநாட்டில் பல ஸ்தாபனங்களை; பிரசாரக் குழுக்களை உண்டாக்கி பல பிர்லாக்கள் பலபல லக்ஷ ரூபாய்கள் உதவினார்கள். என்ன செய்தும் இவர்களது முயற்சி சிறிதும் வெற்றிபெறாமல் இன்று "நிஜமாகவே புலி வந்துவிட்டதே என்ன செய்வது" என்று கூறிக்கொண்டு அலறி பிரிட்டிஷ் மந்திரிகள் காலில் விழுந்து மோதிக்கொள்ள வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

காங்கரசார் எல்லைப்புறத்தில் ஒரு பைத்தியகார (Crack) முஸ்லிமை "எல்லைப்புற காந்தி" என்று அழைத்து, அவருக்கு சங்கராச்சாரிக்கு மேற்பட்ட மரியாதை அளித்து, காந்தியார் முதல் காங்கரஸ்காரர்கள் யாவரும் நடந்துவந்த தந்திரம் எல்லாம் எல்லைப்புறத்தில் தங்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கட்டும் என்கின்ற எண்ணத்தின்மீதேயாகும். இது எதிரி வராமல் இருப்பதற்குக் கோட்டை வாசலில், துளசி தளைகளைக் கொட்டிவைத்து கோட்டைக்குள் தாளிட்டு உட்கார்ந்துகொண்டிருந்த எவனோ ஒரு இந்து முட்டாள் அரசனின்

ரோஜா முத்தையா

# திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் அழைப்பு

ஐயா,

22-4-46 திங்கட்கிழமை காலை 10-மணிக்கு திருச்சி டவுன்ஹாலில் திராவிடர்கழக(ஜஸ்டிஸ்கட்சி) நிர்வாகக்கழக அங்கத்தினர்கள்கூட்டம்நடைபெறும். அதுசமயம் சில முக்கிய விஷயங்கள் பற்றியும், ''விடுதலை'' பத்திரிகை சம்பந்தமாகவும் ஆலோசிக்கப் படும்ாதலால் தாங்கள் அவசியம் வர வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

திருச்சி 13-4-46

T. P. வேதாசலம், தலைவர்.

---

செயலுக்கு ஒப்பாகுமே ஒழிய எல்லைப்புற காந்தியால் புலி வருவதை (இந்தியா முஸ்லிம் ராஜ்ஜியமாவதை) தடுக்க ஒரு கடுகளாவும் பயன்படப்போவதில்லை.

"பாக்கிஸ்தான் பிரித்துக் கொடுத்துவிட்டால் பாக்கிஸ்தான் தன்னை ஆப்கானிஸ்தானுடனோ, பர்ஷியாஸ்தானுடனோ - துருக்கிஸ்தானுடனோ சேர்த்துக்கொண்டால் அல்லது அவர்களில் யாராவது பாக்கிஸ்தானை - விழுங்கிக் கொண்டால் இந்துஸ்தான் என்ன கதியாவது'' என்பது இப்போது காங்கரஸ்காரர்களுடைய (இந்துக்களுடைய- இந்துஆரியர்களுடைய) நிஜமான கவலையாக ஆகிவிட்டது. 6000 மைலுக்கு அப்பாலிருக்கும் வெள்ளை ஆரியநாட்டுடன் இந்துஸ்தானம் சேர்ந்துபிரிட்டிஷ் ஸ்தானாக இது இருப்பதைவிட எல்லையில் தொட்டுக்கொண்டும் முட்டிக்கொண்டும் இருப்பவனுடன் சேர்ந்திருந்தால் இந்த தேசிய காங்கரசாருக்கு நட்டம் என்ன என்று கேட்கிறோம்.

முஸ்லிம்களை மிலேச்சர்கள், நீச்சர்கள் என்று வெறுத்து வெறுத்து வந்ததும் அவர்களை ஏய்த்து அடக்கி அடிமைப்படுத்த கட்டுப்பாடாய் அவர்கள் அறியும்படியாகவே அவர்கள் 'பதறும்படியாகவே செய்துவந்த விஷமங்களுமே இன்று "புலி வந்துவிட்டதே'' என்று கருதும்படியான நிலைமையை உண்டாக்கிற்றே தவிர உண்மையில் புலி நடுங்கிக் கொண்டுதான் இருந்தது.

"முஸ்லிம்களுடைய வாசனையே தங்களுக்குக் கூடாது அவர்களை மதித்து அவர்களுடன் ராஜி பேசுவதே கூடாது'' என்பது போல் பண்டித ஜவகர் பேசிய சிறுபிள்ளைத்தனமானதும் அதிகப்பிரசங்கித்தனமானதுமான பிரசங்கங்களும், வடநாடு தென்னாடு ஆரியப் பார்ப்பனப் பத்திரிகைகள் எழுதிவந்த அயோக்கியத்தனமும் ஆணவமுமான எழுத்துகளுமே இன்று ஜின்னாவின் பெரும்பாகத்தை முஸ்லிம் இந்தியா மாத்திரமல்லாமல் முஸ்லிம் ஏரியாவாகக் கூட செய்துவிட வேண்டிய அவசியத்தைக் கொண்டுவிட்டது.

டாக்டர் மூஞ்சே போன்றவர்கள் இந்துக்களை மாட்டு மாமிசம் சாப்பிடச் சொன்னார், ஆளொன்று ஒரு தடி வைத்துக் கொள்ளச் சொன்னார், சவர்க்கார்கள் ஆளொன்று ஒரு கத்தி வைத்துக்கொள்ளச் சொன்னார்கள், நேருக்கள் ஒரு கை பார்த்து விட்டுவிடுவதுதான் இதற்குப் பரிகாரம் என்றார்கள், காந்திகள் மூன்றாவதவன் ஒழியட்டும் இந்த முஸ்லிம்களை என்ன சேதி என்று கேட்டுவிடுகிறோம் என்றார்கள். மற்றும் சில அன்னக்காவடிகளும் பொறுப்பற்ற ஆகாசங்களும் மகாமகா அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசினார்கள். இவைகள் இவ்வளவையும் கேட்டுக்கொண்டு முஸ்லீம்கள் கைகட்டி வாய் பொத்தி சலாம்போட்டுக்கொண்டு உயிர் வாழ்வார்கள் என்று இந்த வீரர்கள் கருதினார்கள். அதற்கு அடையாளமாக "குயிட் இண்டியா இப்போது குயிட் ஏஷியாவாக விரிந்துவிட்டது'' என்றார்கள் இவைகள் எல்லாம் இன்று வெறும் கப்சாவாக, முடவன் மிறட்டுதலாகப் போய் விட்டது. மிறட்டுதலாகப் போய் விட்டது மாத்திரமல்லாமல் காங்கரசை மறுபடியும் பிரிட்டனிடம் சரணாகதி படலத்தில் கொண்டு போய் சேர்த்துவிட்டது.

"ஆகஸ்டு தீர்மானத்தை (குயிட் இண்டியாவை) வாபசு வாங்க முடியாது'' என்று சொன்ன நேருக்களும், மகாத்மாக்களும், சர்தார்களும் இன்று புலியைப் பார்த்தபிறகு "குயிட் இண்டியா என்றால் பிரிட்டிஷார் வெளியே போகவேண்டு மென்பதல்ல அவர்கள் நம்மைவிட மேலானவர்கள் என்று எண்ணிக் கொள்ளாமல் இங்கேயே இருக்கலாம் என்பதுதான் அருத்தம்'' என்று காந்தியார் வியாக்கியானம் கூறுகிறார், அறிக்கைவிடுகிறார், பிரார்த்தனையில் விளக்குகிறார். (இது 8ந்தேதி சுதேசமித்திரன், 4ந்தேதி இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் இருக்கிறது) இந்த வியாக்கியானத்தை பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்கு வந்தபிறகு சொல்லுவது நாணயமா என்று கேட்கிறோம். அதுவும் தவிர ஜின்னாசாயபு "எல்லைப்புறத்தில் இருந்து அஸ்ஸாமுக்குப் போக பாதை வகுத்துக்கொடுக்க வேண்டும்'' என்று கேட்டபிறகு "ஓஹோ ஜின்னா ஆப்கானிஸ்தானத்தில் இருந்து பட்டாளத்தை அசாமுக்குக் கொண்டுபோக பாதைகேட்கிறார், குதிரை தூக்கிப்போட்டதல்லாமல் புதைக்க குழி தோண்டுகிறது என்பது போல் பட்டாளம் போக வழி கேட்கிறாரே'' என்றெல்லாம் சொல்லி ஒரு அழுகை அழுது விட்டு "குயிட் இண்டியா என்றால் இந்தியாவைவிட்டு வெளியில் போ என்று அருத்தமில்லை. இங்கேயே இரு என்று அருத்தம்'' என்பதோடு அமெரிக்காகாரனைக் கூப்பிட்டு, "பிரிட்டிஷார் முஸ்லிம்களைக் கண்டால் நடுங்குகிறார்கள், முஸ்லிம்களுக்கு பிரிட்டிஷார் இணங்கி

விடுவார்கள்போல் இருக்கிறது. அப்படி இணங்கினால் பிரிட்டிஷாருக்கு உதவிசெய்து முஸ்லிம்களை மிரட்டி நீ எங்களைக்காப்பாற்று" என்று முறையிடுவதுபோல் வெளிக்கும், தூண்டிவிட்டு விஷமம் செய்வதுபோல் உள்ளுக்கும் தந்திரம் செய்வதுபோல் அமெரிக்காவிடமும், ரஷ்யாவிடமும் பஞ்சாயத்துக்கு (பிராதுக்கு) போவதென்றால் இதுதங்கள் இஷ்டப்படி எதுவும் சொல்லலாம், எப்படியும் நடக்கலாம் என்ற தன்மையுள்ள மகாத்மாக்களுக்கும் தேவர்களுக்கும் தான் தகுமே ஒழிய வேறு யாருக்காவது தகுமா? சொல்ல தைரியமளிக்குமா? என்று கேட்கிறோம்.

உண்மையில் இன்று வெள்ளையர் ஆட்சி வெளியேறிவிட்டால் இந்த நாட்டில் ஆரியர்களுக்குப் பாதுகாப்பு எங்கே இருக்கிறது என்று யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கிறோம். முஸ்லிம்கள் ஆரியர்களை நசுக்கினால் மானமுள்ள எந்த திராவிடனாவது ஆரியனுக்கு ஆக சிபார்சுக்கு வர முடியுமா? என்று யோசித்துப் பார்க்க வாசகர்களை வேண்டுகிறோம். இந்த ஆரியர்கள் ஒரு புறம் முஸ்லிம்களை மிலேச்சர், நீச்சர் என்று சொல்லி வேத சாஸ்திர புராண இதிகாசங்கள் எழுதி வைத்துக்கொண்டு இழிவு படுத்திவந்ததல்லாமல் திராவிடர்களையும் சூத்திரர், சண்டாளர், 4ம் 5ம் ஜாதியார்கள், ஆரியரின் வைப்பாட்டி-மக்கள், தீண்டப்படாதார் என்றெல்லாம் இழிவு படுத்தி கோவில், குளம், தெரு, திண்ணை, ஓட்டல், பள்ளி, பந்தி ஆகியவைகளில் நீக்கிவைத்து தங்களைவிட்டு விலக்கிவைத்து வெளியாக்கி கொடுமைப் படுத்தி சட்டம், நடப்பு, பழக்க வழக்கம் ஆகியவைகளில் இழிவுபடுத்திக் கொடுமைப்படுத்தி வரும்போது இவர்களை முஸ்லிம்கள் உதைத்தால் இந்த இழிவுபட்ட ஈனப்படுத்தப்பட்ட திராவிடமக்கள் எப்படி உதவி புரிவார்கள்? எதற்கு ஆகத்தான் பரிதாபப் படுவார்கள்? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இந்த உண்மையை காந்தி நேரு அன்கோ காரர்கள் நன்றாய் உணர்ந்துகொண்டதினாலேயே "குயிட் இண்டியா என்பது 'சூத்திர' மக்களை (திராவிடனை) ஏமாற்றவே ஒழிய வெள்ளை ஆரியனை வெளியே போகும்படி சொல்லுவதற்கு அல்ல" என்று வெள்ளையாக சொல்லிவிட்டார்கள்.

திராவிடர்கள் நிலை இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறது என்றே சொல்லுவோம். வெள்ளையன் நிஜமாகவே வெளியே போனாலும் சரி, பொய்யாகவே போனாலும் சரி முஸ்லிம் ராஜ்ஜியம் ஏற்பட்டாலும்சரி, பாக்கிஸ்தான் ஏற்பட்டு அதில் திராவிட நாடும் சேர்க்கப்பட்டு விட்டாலும் சரி எப்படியாவது ஆரிய அட்டூழியம் திராவிடநாட்டைவிட்டு முதலில் அகலவேண்டும்.

இந்த 20ம் நூற்றாண்டில் ஆரியர்களால் மிலேச்சஜாதி, ஈனஜாதி என்று குறிக்கப்பட்ட முஸ்லிம்களுக்குக்கூட இல்லாத இழிவும், மனிதத் தன்மை வாழ்வுத் தடையும், அடிமைக் கொடுமையும் திராவிடர்களுக்கு அதுவும் இந்த நாட்டுப் பழங்குடி மக்களாகிய திராவிடருக்கு அதுவும் இந்நாட்டையும் மற்றும் பல நாட்டையும் ஆண்ட அரசர் சந்ததிகளுக்கு ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதென்றால், பிரிட்டிஷார் ஆட்சி ஏற்பட்ட பிறகும் 200 வருஷங்களாக இருந்து வருகின்றன என்றால், இதைப் பாதுகாக்கச் சுயராஜ்ஜியம் கேட்கப்படுவது என்றால் திராவிடன் இந்த மாதிரி சுயராஜ்ஜியத்தைப்பற்றி வெறுப்பாய் இருப்பதுமாத்திரமல்லாமல் பாக்கிஸ்தான் ஆட்சியோ ஆப்கானிஸ்தான் ஆட்சியோ ஏதோ ஒரு ஆரியம் அல்லாத ஆட்சி வரட்டும் என்று ஏன் சொல்லமாட்டான் என்று கேட்கிறோம்.

இன்று திராவிட சமுதாயத்தை தலைதூக்கவிடாமல்செய்ய திராவிடர்கள் ஸ்தாபனத்தை ஒழித்து அவர்கள்கட்டைக் கலைத்து, அவர்கள் முயற்சியை அழிக்க பிரிட்டிஷ் ஆட்சியும் ஆரியர் கூட்டமும் எவ்வளவு அக்கிரமங்கள், அடக்குமுறைகள் செய்துவருகிறார்கள் என்பதை எந்த ஒரு கடுகளவு மானமுள்ள திராவிடன் நினைத்துப் பார்த்தாலும் அவன் இரத்தம் கொதிக்காமல் இருக்கமுடியாதென்றே சொல்லுவோம்.

திராவிடர் ஸ்தாபனங்களை அரசாங்கத்தார் மதிக்கவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மாத்திரமல்லாமல் அதை அழிக்கும் மாதிரியில் அதன் பேரால் திராவிட இன எதிரிகளை தயார் செய்கிறார்கள். பார்ப்பனப்பத்திரிகைகள் திராவிட ஸ்தாபன நடத்தைகளை அமுக்கிவிடுவதுமாத்திரமல்லாமல் திருத்தி குறைபடுத்தி விஷமம் செய்கின்றன. வெளிமாகாணங்களில் விஷமத்தனமாகப் பேசி இழிவு படுத்துகிறார்கள். ஆரியர்கள் கையாளாக இருந்து வந்த—வருகிற திராவிட ஆளுகளை

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 13-4-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 40,533

இம்மாதம் 13உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல் வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப் பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 6690 | 8. சென்னை இவ்வாண்டில்663 | 2533 |
| 2. தஞ்சை | 6647 | 9. தென் ஆற்காடு | 2231 |
| 3. கோவை | 6096 | 10. மதுரை | 1616 |
| 4. திருச்சி | 4619 | 11. செங்கல்பட்டு | 950 |
| 5. திருநெல்வேலி | 3423 | 12. பெங்களூர் | 242 |
| 6. இராமநாதபுரம் | 2608 | 13. திருவிதாங்கூர் | 218 |
| 7. வட ஆற்காடு | 2572 | 14. புதுக்கோட்டை | 95 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

## வேண்டுகோள்

### திருச்சி மாவட்ட திராவிட கழகங்களுக்கு

நம் மாவட்டத்தில் திராவிட மாணவர்கள் மே மாதம் முதல் வாரம் முதற்கொண்டு சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதால் ஆங்காங்குள்ள கழகங்கள் கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்வதுடன், அங்கத்தினர்கள் சேர்க்கும் புத்தகம் வேண்டுவோரும் பெற்றுக்கொள்ளவும்.

ஆர். சுலைமான், அமைப்பாளர், திருச்சி மாவட்ட திராவிடர் கழகம், பாக்குப்பேட்டை, உறையூர் போஸ்டு, திருச்சினாப்பள்ளி,

### வட ஆற்காடு மாவட்டத் தோழர்கட்கு

திராவிட கழக அங்கத்தினரின் எண்ணிக்கையில், வட ஆற்காடு மாவட்டம், மிகப்பின்னடைந்திருப்பதால், உடனே ஆண், பெண் இருபாலரும் திராவிடர் கழகத்தில் உறுப்பினராக வேண்டுமெனவும், கறுப்புச்சட்டைப் படையில் சேர வேண்டுமெனவும், எப்படியும் குறைந்தது பதினாயிரம் உறுப்பினர்களாவது சேர்த்துதவ வேண்டுகிறேன்.

ஆர். வெங்கட்ராமன், தலைவர், வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழகம்.

### வேலூர் தோழர்களுக்கு

திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகச் சேரும் தோழர்கள் லாங்குபசார், திராவிடன் பதிப்பகம் தோழர் இருட்டின சாமி அவர்களிடம் சேரலாம்.

---

16-3-46ல் வேளுக்குடியில் திராவிட கழக நிலையத்தில் நடைபெற்ற திராவிட கழகக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

யே இன்று மகா இழிவுபடுத்தி மூழ்க்கடித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட அகம்பாவம், ஆணவம், பிடித்த ஆரியத்தின் அட்டூழியத்தை அழிக்க திராவிடன் ஏதாவது செய்ய வேண்டியதும், என்ன ஆனாலும் சரி எப்படியாவது ஆரியம் ஒழிந்தால் போதும் என்று நினைத்து அதற்கேற்ற தொண்டாற்றவேண்டியதுமே தன்மான திராவிடனின் கடமையாகும். எனவே நிஜமாகவே புலி வந்துவிட்டாலும் திராவிடன் அஞ்ச வேண்டியதில்லை.

---

### காங்கரஸ் ஒழுங்கு நடவடிக்கை

சமீபத்தில் நடந்த சென்னை சட்டசபைத் தேர்தல்களில் ஒழுங்குமுறைக்கு விரோதமாய் நடந்துகொண்டதாக 50 அங்கத்தினர்கள்மீது தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

### சென்னை 2வது சர்க்கிள் திராவிட மாநாடு

17-3-46ல் கிரீமா சென்ட்ரலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தோழர் சுப்ரமணியம் அவர்கள் கொடியேற்றுவித்தார். தோழர் கே. அன்பழகன் மாநாட்டைத் திறந்துவைத்தார். மாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் எஸ். பாலசுந்தரம் அனைவரையும் வரவேற்றார். தோழர் எம். வி. நடராசன் அவர்கள் தலைமைவகித்து உணர்ச்சி மிக்க தம்து தலைமையுரையை நிகழ்த்தினார்கள். தோழர் இரா. நெடுஞ்செழியன், பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றியபின் பகல் 1-30க்கு மாநாடு இனிது முடிந்தது.

மாலையில் சிவஞானம் பார்க்கில் கறுப்புச்சட்டைப்படை அணிவகுப்பு நடைபெற்று பெரியார் அவர்கள் கறுப்புச்சட்டைப்படையின் அவசியத்தை விளக்கிப்பேசினார்கள். சுமார் 2000 தொண்டர்களுக்குமேல் கலந்துகொண்டனர்.

மாலை 6மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் C. D. T. அரசு அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 20000 மக்களுக்குமேல் குழுமி யிருந்தனர். தோழர் இரா. நெடுஞ்செழியன், பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். நன்றி கூறலோடு இரவு 10மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

### தூத்துக்குடி திராவிடர் கழக ஆண்டுவிழா

31-3-46ல் தோழர் எஸ். நீதிமாணிக்கம் அவர்கள் தலைமையில் தூத்துக்குடி மேலச்சண்முகபுரம் திராவிடர் கழக 7வது ஆண்டுவிழா இனிது நடைபெற்றது. தோழர் வி. சின்னமணி அனைவரையும் வரவேற்றார். செயலாளர் ஆண்டு அறிக்கை படித்தபின் தோழர் எஸ். தங்கப்பழம் கொடியேற்றுவித்தார். தோழர் எஸ். என். இராசன் பெரியார் படத்தையும், தோழர் நீதியாளன் திராவிடநாடு படத்தையும் திறந்து வைத்தனர். தோழர்கள் மனோகரன், வேல்சாமி, எஸ். சீலாவதி, கே. மதியழகன், டி. கே. சீனுவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் இராமலிங்கம் நன்றி கூறினார்.

மாலை 7மணிக்கு தோழர் வெற்றிவேல் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. பி. சனார்த்தனம், பி. தில்லை, டி. கே. சீனுவாசன், மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்றிரவு "திராவிடர் நிலை" எனும் சீர்திருத்தநாடகம் கழகத் தோழர்களால் நடிக்கப்பெற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

### நாகைமணி பகுத்தறிவு கழக 2வது ஆண்டுவிழா

31-3-46ல் நாகை வெளிப்பாளையம் மணி பகுத்தறிவு கழக ஆண்டுவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நாகை திராவிடர் கழகத்தில் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் இரா. இளம்வழுதி, நாகை திராவிட மாணவர் கழகத்தை திறந்துவைத்தார். விக்டோரியா பார்க்கில் தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா தொடங்கியது. நாகை முக்குலத்தார் சங்கத்தார் தோழர் வேதாசலம் அவர்களுக்கு வாழ்த்திதழ் வாசித்தளித்தார்கள். தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பாரதிதாசன் படத்தை திறந்து வைத்தார்.

பிற்பகல் 3மணிக்கு தோழர் இளம்வழுதி தலைமையில் இசைப்போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

3½ மணிக்கு தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் புலவர் கா. மு. மாணிக்கம் அவர்கள் பெரியார் படத்தை திறந்துவைத்தார். தோழர் டி. பி. ஆறுமுகம் ராமம்மையார் படத்தைத் திறந்து வைத்தார்.

மாலை 6மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் அவுரித்திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. பி. வேதாசலம், இளம்வழுதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினர்.

---

17-2-46ல் திருச்சி வரகனேரி திராவிட வாலிபர் கழக முதலாவது ஆண்டுவிழா தோழர் எஸ். கோவிந்தராவ் பி.ஏ., தலைமையில் நடைபெற்று தோழர்கள் டி. பி. வேதாசலம், ஈ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் சிங்காரவேலு மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

## திருவல்லிக்கேணி வட்ட திராவிடர் மாநாடு

7-4-46 ஞாயிறன்று காலை 8மணிக்கு திருவல்லிக்கேணி ஐஸ் அவுஸ்ரோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள ஜின்னா மைதானத்தில் டாக்டர் சி. நடேசன் பந்தலில் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பதினாயிரக் கணக்கான மக்கள் வந்து குழுமியிருந்தனர்.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் வி. சுருளியமா அனைவரையும் வரவேற்றார். ஈரோடு தோழர் சண்முகவேலாயுதம் இயக்கக்கொடியை ஏற்றுவித்தார். தோழியர் சத்தியவாணிமுத்து மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைமையுரை நிகழ்ந்த பின் தோழர் சம்பத், பெரியார் ஈ. வெ. ரா. ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். தோழர் சிங்காரவேலு அவர்கள் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கோஷ்டியார் காங்கரசோடு செய்துகொள்ளும் எவ்வித ஒப்பந்தமும் திராவிடர்களைக் கட்டுப்படுத்தாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களைப் பற்றி தோழர்கள் சகஸ்ரநாதன், செய்யாறு சுப்ரமணியம், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

தோழர் அண்ணாதுரை அவர்கள் டாக்டர் சி. நடேசன் அவர்கள் படத்தை திறந்துவைத்தார்.

தோழர் நடராசன் நன்றி கூறலோடு மாநாடு இனிது முடிந்தது.

o o

மாநாட்டுப் பந்தலிலிருந்து மாலை 5மணிக்கு 1000 தொண்டர்கள் கருப்புச் சட்டைப்படை ஊர்வலம் புறப்பட்டு திருவல்லிக்கேணி கடற்கரையடைந்தது. 50000 மக்களுக்குமேல் குழுமியிருந்தனர் தோழர் எ. சி. பாலசுந்தரம் பி.ஏ.எல்.டி. அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் சம்பத், அண்ணாதுரை ஆகியோர் திராவிட இயக்கம்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். நன்றிகூறலோடு இரவு 10மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்

1946 ஏப்ரல் மாதம் 20ம் தேதியிலிருந்து 6 வாரங்கள் வகுப்புக்கள் நடைபெறும். படிப்பை மத்தியில் நிறுத்தியவர்களும், ஏற்கனவே தனியாய் வீட்டில் கல்வி பயின்றவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியப்பாடங்கள் குறுகிய கால அளவில் சொல்லிக் கொடுக்கப்படும். தங்க இடமும் படிப்பும் செலவில்லாமல் கிடைக்கும். சாப்பாட்டுச்செலவு சுமார் ரூ. 20 ஆகலாம். சேர விரும்புகிறவர்கள் பல்கலைக் கழகத்துக்கு மனுச்செய்துகொள்ளலாம்.

## பகுத்தறிவு நாடக சபா

நாகை வெளிப்பாளையம் சேசியர் தெருவில் உள்ள திராவிட பகுத்தறிவு நாடக சபாவில் தோழர் பாப்பையன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கொடி உயர்த்துவிக்கப்பட்டு குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

## பிறப்பு

30-3-46ல் ஓமகுப்பம் பெரியார் இல்லத்தில் பிறந்த பெண் மகவுக்கு திராவிடராணி எனப் பெயர் சூட்டப்பட்டு குடி அரசுக்கு ரூபா இரண்டு நன்கொடையளிக்கப்பட்டது.

o o

வடாற்காடு திருவத்திபுரம் தோழர் மா. ரா. இராசமாணிக்கம் அவர்களின் மனைவி பரிபூர்ணம் அவர்கள் ஈன்றெடுத்த பெண் மகவுக்கு கண்ணகி எனப் பெயரிட்டு குடி அரசுக்கு ரூபா இரண்டு நன்கொடையளிக்கப்பட்டது.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

நாகை எருத்துக்கார தெருவில் தோழர் இலக்குவன்-பழனியம்மை வாழ்க்கையொப்பந்தம் தோழர் டி. கே. விசயராகவலு அவர்கள் தலைமையில் மணமக்கள் மாலை மாற்றிக்கொள்வதோடு நடந்தேறியது. தோழர்கள் நாடிமுத்து, தினதயாளன் சொற்பொழிவாற்றினர். குடி அரசுக்கு ரூபா ஒன்று அளிக்கப்பட்டது.

o o

கோவிந்தகுடி தோழர் கே. இராமசாமி அவர்கள் மகன் தோழர் ஆர். தங்கமணிக்கும், தோழர் காளிமுத்து மகள் இலட்சுமிக்கும் 7-4-46 ஞாயிறு காலை 10மணிக்கு குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையின்கீழ் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

## மறைவு

வந்தவாசி திராவிடர் கழகத் தலைவர் தோழர் தங்கவேலு அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தம் இளங் குழந்தைகளை விடுத்து 27-3-46ல் இயற்கையெய்தியது குறித்து திராவிடர் கழகத்தார் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

o o

நன்னிலம் தன்மதிப்பியக்கத் தோழர்கள் க. உத்தண்டன், க. நாராயணசாமி இவர்களின் தாயார் லோகாம்பாள் 11-3-46ல் இயற்கையெய்தியதை முன்னிட்டு 26-3-46ல் நீத்தார் நினைவு சடங்கு சீர்திருத்தமுறையில் நடத்தி குடி அரசுக்கு ரூ. 1. அன்பளிப்பு அனுப்பப்பட்டது.

---

19-2-46ல் பட்டுக்கோட்டை திராவிடர்கழக சார்பில் தோழர் தவமணிராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் என். பி. காளியப்பன், புலவர் தியாகராசன், பாவலசுந்தரம், சனார்த்தனம் ஆகியோர் பேசினார்கள்.

o o

16-2-46ல் சிருதையூர் ஆதிதிராவிடர் தெருவில் தோழர் டி. எ. வீரமுத்து தலைமையில் நடந்த திராவிடர் கழக கூட்டத்தில் தோழர்கள் பி. சி. ராமலிங்கம், எம். கோவிந்தன், கு. நல்லதம்பி ஆகியோர் பேசினார்கள்.

o o

10-3-46ல் சாத்தூர் தாலுக்கா திராவிடர் கழகச் சார்பில் இருக்கன்குடியில் தோழர் பி. இராசமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் இருளப்பன், சா. இராமசாமி, சப்பையா முதலியோர் பேசினார்கள்.


எங்கள் புது வருஷ நற்செய்தியும் நல்வரவும்

மேனகா சிலேட்டுகள் கைதேர்ந்த திராவிடத் தொழிலாளர்களால் செய்யப்பட்டவை. உறுதியிலும், உபயோகத்திலும் மேனாட்டு சிலேட்டுகளைத் தோற்கடிப்பவை.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

மேனகா சுதேசி சிலேட் பாக்டரி,
Prop. G. சண்முகம்,
பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை